தலைமைச் செயலகம்,
சென்னை–9.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–7(2) துறை

கடித (நிலை) எண்.65, நாள் 12.10.2015

அனுப்புநர்
திரு.பொ. சிவசங்கரன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (முகூபொ)
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை–600 113.

சமூகநல ஆணையர்,
கிண்டி, சென்னை–600 032.

அய்யா,

பொருள்: சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற அனைத்து சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சத்துணவு சமையல் உதவியாளர்கள் ஆகியோர் ஓய்வூதியம் பெறுவதற்கான வாழ்வுறுதிச் சான்றினை (Life Certificate) மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு நேரடியாக சென்று வழங்குவதிலிருந்து விலக்களித்து நிழற்படத்துடன் கூடிய வாழ்வுறுதிச் சான்றினை ஆண்டிற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அஞ்சல் வாயிலாக அல்லது நேரடியாக சென்று வழங்கும் நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.146, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள் 16.11.2009.
2. அரசாணை (நிலை) எண்.170, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி–2) துறை, நாள். 03.09.2010.
3. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் கடித ந.க.எண். 16938/இ3–2/2013, நாள் 31.12.2013 மற்றும் 28.07.2014.

+++++

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணியாளர்களுக்கு மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க பின்பற்றப்பட வேண்டிய

நடைமுறைகள் குறித்தும் மற்றும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வு பெற்ற அங்கன்வாடி பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்களை மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு நேரடியாக வரவழைத்து அடுத்த மாதத்திற்குண்டான ஓய்வூதிய விண்ணப்பத்தினை அளித்த பின்னரே ஓய்வூதியம் பெற்று வழங்க வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே 2-இல் படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வழங்க பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும் மற்றும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சத்துணவு சமையல் உதவியாளர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட பணியாளரை சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு நேரடியாக வரவழைத்து அடுத்த மாதத்திற்குண்டான ஓய்வூதிய விண்ணப்பத்தினை அளித்த பின்னரே ஓய்வூதியம் பெற்று வழங்க வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே 3-இல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டாரம் வழிமரச்சான் மைய அங்கன்வாடி பணியாளர் திருமதி. எஸ். ராஜம்மாள் 31.08.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று கடந்த 31.08.2012 வரை ஓய்வூதியம் பெற்றுள்ளார் என்றும், தற்பொழுது தனியர் அந்தமானில் வசித்து வருவதாலும் வயது முதிர்வு மற்றும் இயலாமை போன்ற காரணங்களாலும் கவுன்சிலரால் சான்றொப்பமிட்ட வாழ்வுறுதிச் சான்றினை பதிவஞ்சலில் மாதம் ஒரு முறை முன்னிலைப்படுத்துவதிலிருந்தும் மற்றும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகத்திற்கு நேரடியாக வருகை புரிவதிலிருந்து தனியருக்கு விலக்கு அளிக்குமாறும் மற்றும் ஓய்வு பெற்ற அனைத்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட பணியாளர்களும் ஓய்வூதியம் பெறுவதற்கான வாழ்வுறுதிச் சான்றினை (Life Certificate) வருடத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் நேரடியாக வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற அனைத்து அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற அனைத்து சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு சமையலர்கள் மற்றும் சத்துணவு சமையல் உதவியாளர்கள் ஆகியோர் ஓய்வூதியம் பெறுவதற்கான வாழ்வுறுதிச் சான்றினை (Life Certificate) மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு நேரடியாக சென்று வழங்குவதிலிருந்து விலக்களித்து, நிழற்படத்துடன் கூடிய வாழ்வுறுதிச் சான்றினை ஆண்டிற்கு ஒருமுறை உரிய அலுவலர்களிடம் சான்றொப்பம் பெற்று சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அஞ்சல் வாயிலாக ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்குள்ளும் அல்லது நேரடியாக ஜூலை மாதத்திற்குள்ளும் அளிக்கும் நடைமுறையினை பின்பற்றலாம் என்றும் தவறினால், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்றும், அதன்பின்னர் எப்பொழுது அவர்கள் நேரடியாக (கட்டாயமாக) சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு சென்று வாழ்வுறுதிச் சான்றினை (Life Certificate) அளிக்கின்றனரோ அந்த மாதத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட மாதாந்திர சிறப்பு ஓய்வூதியத்தை நிலுவைத் தொகையுடன் தொடந்து வழங்கும் நடைமுறையினை பின்பற்றுமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் மற்றும் சமூகநல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. மேற்காணும் நடைமுறைகள் நிதி (ஓய்வூதியம்)த் துறையின் அ.சா.கு.எண்.70074/ஓய்வூதியம்/2015, நாள் 28.09.2015ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஆர். எஸ். சுப்ரவிதி
12/10/2015

அரசு முதன்மைச் செயலாளருக்காக

12/10/15

2/3

நகல்
சமூகநலம் மற்றும் சத்துணவுத்
திட்டத் (சந–4) துறை
சென்னை–600 009.

நிதி (ஓய்வூதியம்) த்துறை,
சென்னை – 600 009.